அனைத்துலகத் தமிழ்க் கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம்
International Tamil Education Cultural Scientific Development Federation

# அரையாண்டுத்தேர்வு 2015-2016
## தமிழ்மொழி

பெயர்:-______________________________

ஆண்டு 12

தாள் 3 மொழிபெயர்ப்பு
90 நிமிடங்கள்

கீழேயுள்ள அறிவித்தல்களை முதலில் வாசிக்கவும்!

- ☐ எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்!
- ☐ விடைத்தாள்கள் ஒவ்வொன்றிலும் உங்கள் பெயரை எழுதவும்!
- ☐ வினாக்களுக்கு விடையளிக்கும் போது வினாவுக்குரிய எண்ணை விடைத்தாளில் எழுதவும்!
- ☐ itec நிறுவனத்தின் முத்திரையிடப்பட்ட தாள்களில் மட்டுமே விடையளிக்கவும்!
- ☐ ஒவ்வொரு வினா அல்லது வினாப்பகுதியின் இறுதியில் விடைகளுக்குரிய புள்ளிகள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது.
- ☐ விடைத்தாள்கள் எல்லாவற்றையும் ஒன்றாக்கி வினாத்தாளுடன் தேர்வு மேற்பார்வையாளரிடம் கையளிக்கவும்!
- ☐ இவ் வினாத்தாள் கேம்பிறிட்ச் பல்கலைக் கழகத்தின் கல்விப் பொதுத் தராதர உயர்தரநிலைப் பாடத்திட்டத்திற்கு அமையவும், அப் பல்கலைக் கழகத்தின் தேர்வு வினாத்தாள்களின் அடிப்படையிலும் அமைக்கப் பெற்றது.

1) கீழேயுள்ள உரைப்பகுதியை வாழிட மொழியில் எழுதுக!

ஒரு பையன் அஞ்சல் அலுவலகத்தில் பொறுமை இல்லாமல் வரிசையில் நின்று கொண்டு இருந்தான். அவனுக்கு ஒரு அஞ்சல் தலை (stamp) வாங்க வேண்டி இருந்தது. பிறகு அவன் அவனுடைய அப்பா கொடுத்த அஞ்சலில் அதை ஒட்டி அஞ்சல் பெட்டியில் போட வேண்டி இருந்தது. வரிசை மிகவும் நீளமாக இருந்தது. வரிசையில் உள்ளவர்கள் மெதுவாகப் போய்க் கொண்டு இருந்தார்கள்.

அவன் அந்த அஞ்சலை முதல் நாளே அஞ்சல் பெட்டியில் போட்டிருக்க வேண்டும். ஆனால் நண்பர்கள் வந்த படியால் மறந்து விட்டான். அவனுடைய அப்பா அவனைக் கோபித்துக் கொண்டு, இன்று கட்டாயம் அஞ்சலில் சேர்க்க வேண்டும் என்று சொன்னார்.

வரிசையில் தாய்மார்கள் குழந்தைகளுடனும், வயதானவர்களும் நின்று கொண்டு இருந்தார்கள். சிலர் தங்கள் முறை வந்ததும் அலுவலர்களிடம் பல கேள்விகள் கேட்டனர். அந்தப் பையனுக்கு மேலும் எரிச்சலாக வந்தது. கடைசியாக அவன் முறை வந்தது. சட்டைப் பையில் கையை விட்டுப் பார்த்தான்; திரும்பவும் தேடினான். அஞ்சல் அங்கு இல்லை!

(15 புள்ளிகள்)

2) கீழேயுள்ள ஆங்கில உரைப்பகுதியை தமிழில் எழுதுக!

Festivals are celebrated by people all over the world. Learning about these customs can help us to understand and appreciate different cultures, beliefs and ways of life. Festivals are mostly celebrated annually, and many are observed for religious reasons. Some take place on the same date every year, like Christmas, but others may be celebrated on different dates because they are determined by the solar or lunar calendars, such as Diwali or Eid.

Some festivals last only for one day; others may last for several days or even weeks. Some are a quiet time for reflection and remembrance, whereas others take the form of a party or parade. People often visit their relatives and friends, and special food may be prepared to mark the event. It is common to exchange gifts and good wishes. In some cultures, children might receive extra pocket money to spend. Shop windows may be decorated with coloured lights which children love to admire.

These occasions are also an opportunity for people to think of those less fortunate than themselves, and some families give money to charity at these times. The celebrations often encourage people to forget old arguments and to extend the hand of friendship. Some even take an oath not to speak badly of anyone.

(15 புள்ளிகள்)